பதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

DUPLICATE

# இந்துசாதனம்.

விரோதி௵ (1889) ஆவணி௴ ௨௨ ஆரம்பமானது.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: | ௵ 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, | ரூ. 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: | ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:— | ஒருகலம் | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5 00 |
| ,, | கார்கலம் | ரூ. 3 15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு மேல் விகிதங்களிற் பாதி. விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௫. } யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரி௵ ஐப்பசி௴ ௫ (௧௯௨௩ அக்டோபர் ௨௨) திங்கட்கிழமை { இலக்கம்—௩௨.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றுள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## ஸ்ராண்டேர்ட் கொளுக்கியோடுகள்.

**(Standard Tiles.)**

இவை வேரோக் என்னுமிடத்திலுள்ள ஸ்ரான்டேர்ட் ஓட்டுக் கம்பனியாராற் செய்யப்படுவன.

இவ்வோடுகள் இக்காலத்திலுள்ள மற்றைய ஓடுகளைக்காட்டிலும் திறமானவையும் மலிவானவையும் இலேசானவையும் நீடித்தகாலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கனவுமாகும். இந்த ஓடுகளே இலங்கையிலும் இந்தியாவிலும் இக்காலத்தில் அதிகமாக உபயோகிக்கப் படுகின்றன. இவைகள் (வேயப்பட்ட வீட்டின் வசிப்போருக்கு) குளிர்மையையும் தேகாரோக்கியத்தையுங் கொடுக்கத்தக்கனவாயும் எவ்விஷயத்திலும், ஏனையஓடுகளிலுஞ் சிறந்தனவாயுமிருக்கின்றன. யாழ்ப்பாணத்துள்ள சிறந்த கல்லூரிகளுக்கு இவ்வோடே உபயோகிக்கப் பட்டுள்ளன மற்றும் ஓடுகளை வாங்குதற்கு முன் இதனையும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். விரும்புவோர் யாழ்ப்பாணத்திலேனும் வல்வெட்டித்துறையிலேனும் பருத்தித்துறையிலேனும் S. வீரகத்திப்பிள்ளையிடம் பெற்றுக்கொள்ளலாம். (H. 18.)

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற மருந்துகள்.

## இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில் கோடுக்கும்!!

**ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.**

**புஷ்டிக்கு கைகண்ட மருந்து.**

இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.

ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!!

புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரிசைஷ் பார்க்கலாம்! தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150-மாத்திரை ரூ. 10 50-மாத்திரை ரூ. 4-0-0
20-மாத்திரை ரூ. 2. வி. பி. சார்ஜ்வேறு.

**பிரமேக நிவாரணி.**

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

**ரசமணி.**

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழிலபிவிருத்தி, நினைத்தகாரிய சித்தி மென மேலும் பெருகும். தொத்து நோய், அவமிருத்து தோஷம், மோகினியாதிகள் அணுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும். மணி 1-க்குரூபா 2. 6 மணி ரூபா 10.

பினாங்கு, சிங்கப்பூர், நேட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. சருப்பண பிள்ளை, வைத்தியசாலை, பழனி. S. I. (Q. 40)

M. S. MAIDEEN ABDULKADER MARICAR,
& Doctor, T. N. SAMIPILLAI & Co.
MUHIADEEN MEDICAL HALL,
PORTO-NOVO, S. A. Dt.

எனது அன்பர்களே. எனது அன்பர்களே.

சற்று கவனியுங்கள். சற்று கவனியுங்கள்.

இனும்! இனும்!!

இந்த லேகியம்போல் பிற வைத்தியர்கள் செய்து கொடுக்கும் பக்ஷத்தில் ரூபா 1000 இனும் கொடுக்கப்படும்.

## சிட்டுக்குருவி வீரதத்துவ லேகியம்.

எனது அன்பர்களே, சிட்டுக்குருவி லேகியமென்று சிலர் செய்து விற்கிறார்கள். அதாவது நரம்புகளுக்குத்தான் கொஞ்சம் வலுவைக்கொடுக்கும். இந்த லேகியம் அப்படியல்ல; எல்லா வியாதிகளையும் கண்டிக்கும்; இந்த வீர தத்துவ லேகியத்தினுடைய மகத்துவம் புசித்தவர்க ளறிவார்கள். இந்த லேகியமானது செய்யும் முறையும் பாகமும் தற்காலம் ஒருவரும் செய்தும் அறிந்துமிரார்கள். அதாவது சித்தர்கள் பெரியோர்கள் பெரிய பெரிய நாதாக்களுடைய செய்யும் முறை சுல்த்தான்கள் ராஜாக்கள் செய்து சாப்பிடும் வீர தத்துவம் தங்கிய லேகியம். தங்கம் குங்குமப்பூ கஸ்தூரி அம்பர் பவளம் முதலிய சிவசக்துக்களைக்கொண்டு சேகரிக்கப்பட்டது. இந்த லேகியமானது 1008 நரம்புகளுடைய வியாதிகளையும் சுத்தப்படுத்தி மேகவெட்டை மேகச்சூடு மேகசாங்கை முதலியவற்றை நீக்கும். எங்கள் கம்பெனி மருந்தை ஒருமுறை தருவித்துச் சாப்பிடும் பக்ஷத்தில் தங்கள் ஆயுள் பரியந்தம் கைவிடமாட்டீர்களென்பது நிச்சயம்.

40 நாள் ஒரு மண்டலம் டப்பி 1க்கு ரூ. 10—0—0
20 நாள் அரைமண்டலம் டப்பி 1க்கு ரூ. 6—0—0
V. P. சார்ஜ் பிரத்தியேகம் 0—0—0

லேகியம் சாப்பிடும் முறை லேகியத்துடன் அனுப்பப்படும்.

N. B. வியாதியுள்ளவர்கள் டாக்டர் நேரில் பார்க்கவும். எங்கள் கம்பெனியில் எல்லா விதமான லேகியங்களும் மாத்திரைகளும் தைலங்களும் திராவகங்களும் பஸ்பங்களும் சகாய விலைக்குக் கொடுக்கப்படும்.

சிங்கப்பூர் பினாங் மலாய் எஸ்டேட்களுக்கு மருந்துக்கிரயமும் தபால்செலவுக்காக ரூ 2ம் முன்னதாக மணிஆர்டர் அல்லது ரிஜிஸ்டர் மூலமாக அனுப்பவேண்டியது. அப்படி அனுப்பாவிட்டால் அனுப்பப்படமாட்டா.

எங்களுடைய கம்பெனிக்கு கமிஷன் ஏஜண்டு தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும். விபரம் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

(தந்தி விலாசம்—முகையதீன்).

மானேஜர்: எம். எஸ். மெய்தீன் அப்துல்காதிர் மரைக்காயன்,
& டாக்டர் டி. என். சாமிப்பிள்ளை & கோ.,
முகையத்தீன் மெடிக்கல் ஹால்,
பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

எங்கள் சோல் ஏஜண்டு:
P. செல்லையா செட்டியார்,
கொத்தமல்லி ரோட்டு,
நாவல்பட்டி போஸ்ட், சிலோன். (Y. 20)

## தீபாவளி நெருங்கிவிட்டது.

கனவான்களே! உடனே ஆர்டர் அனுப்புங்கள்!!

விலைசரசம்! உடைநயம்!! அருமையான தினுசு!!!

# சேலம் ஜவுளி தினுசுகள்.

எங்கள் கம்பெனியில் சேலத்தில்தயாராகும் சகல விதமான தினுசுகளிலும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கு விசேஷமாக பிடித்தமுள்ள தினுசுகளிலும், ஜோடி, துப்பட்டா, துயிலிமாதிரி அங்கவஸ்திரங்கள், பச்சாணுக்களும், நயம் 120 நெ. 100 நெ. 80 நெ. நூலில் பலகலர் பட்டினாலும் வெள்ளி ஜரிகையினாலும் கரைகளுடையதும் பலவிதமான பேட்டுகள் வைத்து அற்புதமான வேலைப்பாடுடையதும் பட்டினாலும் ஜரிகையினாலும் பலவிதமான முந்திகள்போட்டதும் முந்தியில்சிட்டை போட்டதாகவும் கிடைக்கும். உடல் நயம் வெண்பட்டில் ஜரிகைப்பேட்டுஜோடி, துப்பட்டாக்களும், பலகலர்பட்டு முடிலேஞ்சிகளும், பலகலர்பட்டுகளில் அருகுமுந்தியில் ஜரிகையினால் பலவித உருவங்களமைத்து உடலில் ஜரிகைக் கொட்டடி போட்ட லேஞ்சிகளும் தயாராகிறது.

குறிப்பு:—எல்லா தினுசுகளும் நம்ம சொந்தத் தறிகளில் தயாராவதால் நெசவு அழுத்தமாகவும் நோட்டமுள்ளதாகவும் அருமையான தினுசுகளாகவும் கிடைக்கும். விலை சகாயமாக எல்லா ஆர்டர்களுக்கும் வி. பி. யில் அனுப்பப்படும். வி. பி. தினுசு பிடித்தமில்லாவிடில் திருப்பியனுப்பி வேறு தினுசு பெற்றுக்கொள்ளலாம்.

தந்திவிலாசம், ஜவுளி சேலம், Javuli Salem. } கா. கோ. அ. வெ. கு ஓபுளிசெட்டியார் & Co., ஜவுளிவியாபாரம் கொகை சேலம். (Q. 44)

**காகிதாடா சேலை.**

16 முழ நீளம்; 2½ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லில் சிவப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற்றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக்கும். இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

**வெள்ளிக்கெண்டைச்சால்வை.**

5½ முழ நீளம்; 2½ முழ அகலம்.

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் கைஸ் நூலினால் நெய்யப்பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்சு வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பெனி. (Y. 18.) பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

**சருவஞானோத்தர ஆகமம்.**

ஞானபாதம் தமிழ் மூலமும் முத்திரந்த விருத்தியும்.

இது ஸ்ரீகண்டபரமேசுவரரால் ஸ்ரீசுப்பிரமணியருக்கு உபதேசித்தருளப்பெற்றது. சைவ சித்தாந்த சாரமாயுள்ளது. விருத்தியில் பல அரும்பெரும் விஷயங்கள் விளங்கும். வடமொழி மூலமும் சேர்க்கப்பெற்றிருக்கின்றது. நயம் கிளேஸ் காகிதத்தில் பக்கம் 200 வரையுள்ளது. வேண்டுவோர் நம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விலை ரூபா 1—8—0.

தபால் சார்ஜ் வேறு.

ஒரே முறையில் ஐந்து புத்தகம் வாங்குவோர்க்கு ஒரு புத்தகம் சேர்த்துக் கொடுக்கப்பெறும்.

☞ பொ முத்தையபிள்ளை, சிவாகம சங்கம், தேவகோட்டை. (H. 20)

Telegrams: "APPANNA", BANGALORE CITY"

## கெ. தி. அப்பண்ணு & கம்பெனி,

பெங்களூர் நகர், (இந்தியா).

**பிரசித்திபெற்ற மைசூர் ஊதுவத்திகள்.**

| | ரூ.அ.பை. |
|---|---|
| பன்னீர்வத்திகள் சேர் 1க்கு விலை | 0-12-0 முதல் ரூபா 2-0-0 வரை. |
| புனுகுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா | 1 8-0 முதல் ரூபா 4-0 0 வரை. |
| மத்தாப்புவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா | 1 8-0 முதல் ரூபா 3 0-0 வரை. |
| ஜவ்வாதுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா | 5-0 0 முதல் ரூபா 7-0-0 வரை. |
| கஸ்தூரிவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா | 5 0 0 முதல் ரூபா 12 0-0 வரை. |
| அம்பர்வத்திகள் சேர் 1க்கு விலை ரூபா | 1-8-0 முதல் ரூபா 20-0-0 வரை. |
| வாசனை வில்லைகள் வில்லை 1க்கு விலை ரூ. | 0-4-0 முதல் ரூபா 5-0-0 வரை. |
| புனுகு தோலா 1க்கு விலை ரூபா | 10-0 0 முதல் ரூபா 12-0-0 வரை. |
| தசாங்கம் சேர் 1க்கு விலை ரூபா | 2 0 0 முதல் ரூபா 3-0-0 வரை. |

**கூந்தல் வளருந் தைலம்.**

டில் மோஹினி ஹேர்ஆயில்புட்டி 1க்கு 0-12 0 டஸன் 1க்கு 8-0.0.
ஜாஸ்மின் ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0. டஜன் 1க்கு 8-0-0.
பளவர் பஹார் ஹேர் ஆயில் புட்டி1க்கு 0.12-0. டஜன் 1க்கு 8-0-0.
கமலா ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0. டஜன் 1க்கு 8-0-0.

**ஓட்டோ வாஸனை வெண்டுகள்.**

ஒரு கிராம் கொண்ட சிறியபாட்டல்கள் டஜன் 1க்கு விலை ரூபா 6-0-0

**சந்தன சோப்புகள்.**

டஜன் 1க்கு ... ... ரூபா 6-0-0

**சந்தன மரத்தூள்.**

பவுண்டு 1க்கு ... ... விலை ரூபா 1-8-0

தங்களுக்குத் தேவையான வாசனைத் திரவியங்களுக்கு உடனே எழுதுங்கள்.

Address:—
K. T. APPANNAH & Co,
Bangalore City.
(INDIA).
(Y. 16)

உலகேங்கும்புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது

**புஷ்டிக்கு கைகண்ட ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.**

ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

புஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்றுமில்லை. பரீக்ஷைக்கு ஒரே குளிகை போதும்; இழந்துபோன பலத்தை திரும்பக் கொடுக்கும்; நரம்புத் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் திவ்விய ஔஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தை தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150 பில்ஸ் ரூ. 10. 50 பில்ஸ் ரூ. 4-0 0
20 பில்ஸ் ரூ. 2. வி. பி. சார்ஜ் வேறு.

**பிரமேக நிவாரணி.**

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்கும். 1 புட்டி ரூ. 2.

**பிளேக் மாத்திரை.**

சுரம்கட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 9 மணி நேரத்தில் சுரத்தை நிறுத்தும்; ஜன்னி தோஷம் வராது. புட்டிக்கு ரூ 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரூ. 1.

T. R. சுருப்பண பிள்ளை, வைத்தியசாலை, பழனி, S. I. (Q. 41)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— ருதிரோற்காரி௵ ஐப்பசிமீ 13௳ திங்கட்கிழமை.


## கல்வி விஷயமாக அரசினர் கொண்டிருக்கும் நோக்க மென்ன?

இலங்கை அரசினர் சனங்களுக்கு ஆவசியகம் ஊட்டப்படவேண்டிய கல்வியைக் காலத்திற்குக்காலம் குறைத்து அலட்சியஞ்செய்து வருகின்றனரென்பதை இங்குள்ள பத்திரிகாசிரியர்களும் தேசாபிமானிகளும் சட்டநிரூபண சபை அங்கத்தவர்களும் அரசினருக்குக் காலந்தோறும் எடுத்துரைத்துவருகின்றனர். எப்படி இடித்துரைத்தாலும் அரசினர் தாம் நினைத்ததையே செய்கின்றனர். ஒரு வித்தியாசாலைக் கட்டிடத்தைப் பெருப்பிக்கும்போதும் புதிதாக ஒரு வித்தியாசாலையைக் கட்டும்போதும் அரசினர் அக்கட்டடச் செலவிற்காக ஒரு தொகைப் பணம் உதவுவது வழக்கமாயிருந்தது. இந்தவருடத் தொடக்கமாக அவ்வாறாக நிதி உதவப்படாதென அரசினர் இப்பொழுது தெரிவித்திருக்கின்றனர். அரசினர் இப்பொழுது செய்யப் புகுந்த இச்செயல் இலங்கையில் கல்வியை விருத்தி செய்வதற்குப் பெரும் இடையூறாகவிருக்கும். ஊர்கள்தோறும் வித்தியாசாலைகளை ஸ்தாபித்து அரசினர் நன்கொடைப்பணமும்பெற்றுப் பள்ளிக்கூடங்களை நடத்திவரும் வித்தியாசாலை அதிகாரிகளை அரசினர் வெறுப்போடு பார்க்கின்றனர். அந்த அதிகாரிகளுக்கும் உபாத்தியாயர்களுக்கும் பலவிதமான நிபந்தனைகளை விதிக்கின்றனர். புதிதாக ஒருவித்தியாசாலையை அரசினரிடம் பதிவுசெய்விப்பதென்றால் மிக அரிதாக விருக்கின்றது. செல்வப்பிள்ளைகளன்றி ஏழைப்பிள்ளைகள் அங்கிலங் கற்பது மிகக் கஷ்டமாயிருக்கின்றது. வித்தியா வேதனத்தையும் கல்விக்காகிய மற்றுஞ் செலவுகளையும் காலத்திற்குக்காலம் உயர்த்தி வருகின்றார்கள். உபாத்தியாயர் உபகாரவேதன விஷயமாக இன்னமும் பூரணமான முடிவில்லை. இதற்குப் பின்னர் தொடங்கிய உத்தியோகத்தர் வேதன விஷயம் நிறைவேறிப் பழையதாயும் விட்டது. இவற்றையெல்லாம் ஊன்றிச் சிந்திக்குங்கால், இலங்கைவாசிகளுக்குத் தகுந்த கல்வி யூட்டுவது அரசினருடைய நோக்கமன்று என்பது புலப்படுகின்றது.

ஒரு தேசத்தின் வருவாயில் நூற்றுக்கு ஐந்து அல்லது ஆறு விகிதம் செலவிடுவதனாற் கல்வி விருத்தியாகுமென எவருங் காத்திருக்கவொண்ணாது. இலங்கையி லன்றி வேறு எத்தேசத்திலாயினும் இத்துணை அற்ப பாகம் கல்வியின் பொருட்டு செலவு செய்யப்படுமென நாம் நினைக்கவில்லை. சுதேச மன்னராற் பரிபாலிக்கப்படும் மைசூர் பரோடா என்னும் நாடுகளில், கல்வி விருத்தியின்பொருட்டு நூற்றுக்கு நாற்பது ஐம்பது விகிதம் செலவிடப்படுவதையும் அரசினர் தம் நாட்டிற் கல்வி விஷயமாகப் பெரிதுஞ் சிரத்தை கொள்வதையும் இப்பத்திரிகையிற் பலமுறை கூறியுள்ளோம். இந்த இரு நாடுகளிலும் உயர்தரக் கல்வி மாணவர்களுக்கு வேதனமின்றி ஊட்டப்படுகின்றது. நமது இலங்கையிலே ஆரம்பக் கல்விதானும் வேதனமின்றி ஊட்டப்படுதலில்லை. எந்த நாட்டிலே நீதியையுங் கல்வியையும் முறையே சனங்களும் மாணவர்களும் செலவின்றிப் பெறுதல் கூடுமோ அந்த நாடே சீர்திருத்தமுள்ள அரசினரால் ஆளப்படும் நாடெனச் சொல்லத்தகுந்ததாகும்.

இலங்கை அரசினர் கல்வி விஷயமாகச் செலவுசெய்யும் அற்ப விகிதப் பொருளுள்ளும் கூடியபகுதி வித்தியாபகுதி உத்தியோகத்தர்கட்கே வேதனமாக உதவப்படுகின்றது. கல்வியைப் பரிபாலிப்பதற்குச் சில உத்தியோகத்தரை நியமித்துப் போஷிப்பதன்றி, உத்தியோகத்தரைப் போஷிப்பதற்காகச் சிறிது கல்வியையும் நாட்டில் உதவி வருதல் முறையாகாது.

இனி, நமது அரசினர் பொதுவான உயர்தரக் கல்வியைத்தான் அதிகம் ஊட்டாவிட்டாலும், கைத்தொழில் விவசாயம் வியாபாரம் முதலியவற்றிற்கான கல்விகளையேனும் ஊட்டுதல் வேண்டுமென நோக்கங்கொள்ளுகிறார்களா. அவ்வகைக் கல்விகளையூட்டிவருவரேல், நம்மவர் கைத்தொழில் விவசாயம் வியாபாரம் முதலியவற்றைச் செய்ய அபிரோப்பியர் இங்குள்ள உத்தியோகங்களைப் பார்த்து வருதல் கூடுமே.

எவ்வகையான கல்வியுமின்றி இந்த இலங்கைவாசிகள் என் செய்வார்கள். சட்டநிரூபணசபை அங்கத்தவர்களும் பத்திரிகாசிரியர்களும் அபிமானிகளும் ஆசிரியர் வித்தியாசாலை அதிகாரிகளாயுள்ளவர்களும் இவ்விஷயத்தில் அனுகூலமடையும்வரைக்கும் பெருங்கிளர்ச்சி செய்தல் வேண்டும். இல்லையேல் இவ்விலங்கைவாசிகள் காலகதியிற் கல்வியறிவற்ற மூடர்களாய், அந்நியருக்கு உழைத்துக்கொடுக்குஞ் சாதியினராக மாறிவிடுவரென்பது திண்ணம்.

---

### தீபாவளி.

தீபாவளியைப்பற்றிய வரலாற்றை, "சோதிட கலாநிதி' என்னும் பத்திரிகையிலிருந்து அனுவதித்து இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்து வெளியிட்டுள்ளோம். தீபாவளிதினம் ஒரு விரத தினமாகக் கொண்டாடவேண்டியதன்றி உண்டாட்டுக் களியாட்டிற்குரிய தினமன்று. இத்தினத்தன்று வைகறையி லெழுந்து தீபத்தை நிரைத்து அவற்றின் முன்னிலையில் எண்ணெயிட்டு ஸ்நானஞ்செய்து கோடிவஸ்திரந் தரித்து, ஆலயதரிசனஞ்செய்து வீட்டிற்கு மீண்டு வந்து சுற்றமித்திர சகிதமாகப் போசன மருந்தவேண்டுமென்பதே விதியாகும். ஆலயங்களிலுள்ள மூர்த்திகளுக்கும் அத்தினத்தன்று வைகறையில் எண்ணெய்க்காப்பிட்டு விசேஷ அபிஷேகஞ்செய்துகோடிவஸ்திரஞ்சாத்தி விசேஷ பூசை நடைபெறுவது வழக்கம். இங்குள்ள அறிஞர்கள் அக்காலந்தொடக்கம் இற்றை வரையில் இத்தீபாவளியை ஒரு புண்ணிய தினமாகவே கொண்டாடுகின்றனர். மதுபானிகளும் புலாலுண்போருமாகிய பாமர சனங்கள் இத்தினத்தில் அப்பியங்க ஸ்நானஞ்செய்து கோடிவஸ்திரந்தரித்துக்கொண்டு கள் சாராயம் முதலிய வெறிப் பானங்களைக் குடித்து ஆடு கோழிகளை வதைத்து அருந்திக் குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்பவர் போலாகின்றனர். இவர்கள் இனியேனும் இத் துர்ப்பழக்கத்தைவிட்டு உய்தல்வேண்டும். தீபாவளிதினத்தன்று விதிக்கப்பட்டபடி செய்தல்வேண்டும். இறைச்சிக்கும் மதுபானத்திற்குஞ் செலவிடும் பொருளை, ஏழைகளுக்கு வஸ்திர தானத்தின் பொருட்டுச் செலவு செய்தல் வேண்டும். சுதேசிவஸ்திரத்தை அணிந்து கொள்ளுதல்வேண்டும். அறிவுடையோர் இத்தினத்தில் நூல் நூற்றல் வஸ்திரம் நெசவுசெய்தல் முதலிய விஷயங்களைக் குறித்துப் பிரசங்கஞ் செய்தல்வேண்டும்.

---

## சமாசாரம்.

காலநிலை:—சென்றவாரந் தொடக்கம் பெருமழை பெய்து இன்றுதான் ஒருவாறு வெளித்திருக்கின்றது. மழை இவ்வளவில் வெளித்துச் சிலநாட்செல்லப் பெய்யுமழை பயிருக்குநன்றும்.

கோப்பாய் அரசினர் ஆசிரியர்கல்லூரிப்பிரவேசம்:—இக்கல்லூரிப் பிரவேசம் வருகிற நவம்பர் மீ 2௳ $4\frac{1}{2}$ மணிவரையில் நடைபெறும். அத்தருணம் வித்தியாதிகாரியாகிய கௌரவ மிஸ்டர் மைக்கிறேயவர்கள் சபைத்தலைவராகவிருந்து கூட்டத்தை நடத்துவர்.

கந்தரோடை இங்கிலிஷ் பாடசாலை:—இப்பாடசாலையின் விருத்தியைக் குறித்துக் கேள்விப்பட்டுச் சந்தோஷிக்கின்றோம். கேம்பிறிஜ் ஜீனியர் செட்டிவிக்கேற் பரீட்சைக்கு மாணவரை ஆயத்தஞ்செய்து விடுதற்கும் வித்தியாபகுதியார் இப்பாடசாலைக்கு உத்தரவளித்திருக்கின்றார்கள். இப்பொழுது பாடசாலை அதிகாரிகள் இப்படிப்பட்ட நயமான ஒழுங்குகளை இலகுவாய் நிறைவேற்றுவதற்காகப் புதிதாகவுஞ் சேர்க்கின்றார்களென அறிகின்றோம் அவர்கள் நன்முயற்சி அனுகூலப்படுவதாக.

மானிப்பாய் இந்துக்கல்லூரிக் குருபெற்றோர் சங்கம்:—இந்த ஐப்பசி மீ 2௳ வியாழக்கிழமை (18-10-23) பிற்பகல் 4 மணியளவில் ஷை கல்லூரிமண்டபத்திலே அக்கல்லூரிச் சமயசங்கத்தவரால் மஹா நவமி நோன்போடு கூடிய சரஸ்வதிபூசை முதலிடன நடத்தப்பட்டபின்பு ஏலவே வெளியிடப்பட்ட விளம்பரப்படி குருபெற்றோர் சங்கத்தினர் விரும்பியவாறு, அக்கல்லூரிப் பிரதமாசிரியர் ஸ்ரீ வி. வீரசிங்கம் அவர்களாலே அங்கே "பெற்றோர் கடமை" என்னும் விஷயமாகச் சிறந்ததோர் உபந்நியாசஞ் செய்யப்பட்டது. அப்பொழுது மாணவர்களும், அவர் பெற்றோரும், ஆசிரியர்களும், பிறரும் ஆகிய வெகுசனங்களும் அவ்வுபந்நியாசத்தைக் கேட்டு தந்தைமகற்காற்றுமுதவி இவை யிலையெனு மெய்யுணர்வுபெற்று வியந்துமகிழ்ந்தனர். 8 மணியளவிலே தேவாரபாராயணத்துடன் கூட்டம் சமாப்தியாயிற்று. அங்கு வந்திருந்தோரனைவரும் பிரசாதம் பெற்று மீண்டனர். தங்கள் விருப்பத்திற் கிசைந்து எவர் மனதிலுங் குடிகொண்டிருக்கும் அஞ்ஞானவிருளை நீக்கும் மெய்ஞ்ஞானதீபம் போன்ற இவ்வரிய உபந்நியாசத்தைச் செய்த பிரதமாசிரியரவர்கட்கு ஷை சங்கத்தார் மிகவும் கடமைப்பட்டுள்ளவர்களாயிருக்கின்றார்கள். இவ்வண்ணமே இடையிடையே இவ்விடத்தில் அரிய உபந்நியாசங்கள் நிகழுமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் நிறைவதாக. கடிதம்.

கடலுங்கப்பாலிருக்கும் இலங்கையார் சங்கம்:—இலங்கையிலிருந்து பலவகை நோக்கத்தோடும் புறநாடுகளுக்குச் சென்றிருக்கும் இலங்கையரோடு சம்பந்தப்பட்ட விஷயங்களை எடுத்துப் பேசி அவர்க்கு வேண்டிய சகாயம் புரியும் நோக்கமாய் இலங்கையிலே ஓர் சங்கம் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. சென்ற 20௳ இதன் ஆரம்பக் கூட்டம் யாழ்ப்பாணம் றிஜ்வே மண்டபத்தில் நடைபெற்றது. சலாபத்திற் பிரசித்திபெற்றுவிளங்கும் அப்புக்காத்து மிஸ்டர் விக்றர் கொறியா அவர்கள் இங்கு வந்து அக்கிராசனம் வகித்தனர். இவர் தமது ஆரம்ப பிரசாரணத்திலே இப்படிப்பட்ட சங்கமொன்று ஸ்தாபிக்கப்படவேண்டிய அவசரத்தையும், சிங்களர் தமிழருக்குள் இப்பொழுது காணப்படும் மனப் பிறப்புகள் அகன்று, சமாதானம் வரவேண்டுமென்னுங் கருத்தையும் விஸ்தரித்து வற்புறுத்தினர். பின்னர்ச் சில நிர்ணயங்கள் செய்யப்பட்டன. அவையாவன:— 1. புறநாட்டு இலங்கையார்க்குதவுஞ் சங்கமொன்று ஸ்தாபிக்கப்படுவது அவசியம். 2. புறநாடுகளிற் பிறக்கும் இலங்கையாரின் பிள்ளைகளின் பிறப்பு இறப்புப் பதிவு செய்யும் ஒழுங்கொன்று செய்யப்படவேண்டும். 3; இலங்கையிலே பிறந்து வளரும் பிள்ளைகளுக்குரிய சலாக்கியமெல்லாம், அச்சப் பிள்ளைகளுக்குங் கிடைக்கத்தக்கதான ஒழுங்கு செய்யப்படவேண்டும். —உ. தா-கை.

கோண்டாவிற் சைவப்பிரகாச வித்தியாசாலைப் பரிசளிப்பு:—இவ்வித்தியாசாலைப் பரிசளிப்புக் கூட்டம் சென்ற புரட்டாதி மீ கசுந்திகதி (2-10-23) செவ்வாய்க்கிழமை சாயந்தரம் 5 மணி தொடக்கம் இரவு $9\frac{1}{2}$ மணி வரையில் நடைபெற்றது. கௌரவ ஸ்ரீ துரைசுவாமி யவர்களே சபைத்தலைவராக விருந்து மாணாக்கருக்குப் பரிசுகள் வழங்கினர். வித்தியாசாலைச் சிறுவர் சிறுமியர் செய்த தேவார பாராயணமும் மநகப் பிரசங்கங்களும் மெச்சத் தக்கன. சபைத்தலைவராக விருந்த ஸ்ரீமாந் துரைசுவாமியவர்கள், வண்ணார்பண்ணையில் நிகழ்ந்த மகாத்மாகாந்தி தினக் கொண்டாட்டத்திற்கும் சபைத்தலைவராகச் செல்ல வேண்டியிருந்தமையினால், ஸ்ரீமாந் அ. சபாபதியவர்களைச் சபைத்தலைவராக இருக்கும்படி வேண்ட அவர் அதற்கியைந்து இருந்தனர். பின்னர் கோப்பாய் அரசாட்சி ஆசிரியகல்லூரியாசிரியர் ஸ்ரீ சி. கா. சிதம்பரப்பிள்ளையவர்கள் பாடசாலைமுன்னிலைமை பின்னிலைமைகளை ஒப்பிட்டுப்பேசி மாணவர்களை வியந்து ஸ்ரீ கனகசிங்கம் மனேசரவர்களையும் கம்மிற்றியாட்களையும் போற்றிப் புகழ்ந்து இதுபோல இன்னுமோர் கட்டிடம் அமைக்கவேண்டுமென்றுங் கூறி முடித்தனர். அதன்பின்னர் ஸ்ரீ சி. நாகலிங்கம் பண்டிதர் அவர்களும் ஸ்ரீ வை. ஆறுமுகஉபாத்தியாயரவர்களும் ஸ்ரீ அ. கணபதிப்பிள்ளை உபாத்தியாயரவர்களும் ஸ்ரீ மு. சுவாமிநாதன் அவர்களும் ஸ்ரீ ச. இளையதம்பிப் பண்டிதர் அவர்களும் அக்கிராசனரும் தத்தம் பேச்சுக்களை நன்மொழியாகக் கூறி இனிது முடித்தனர். ஈற்றில் மேற்படி வித்தியாசாலைத் தலைமையாசிரியர் சபையோருக்கு வந்தனங் கூறியபின் தேவாரபாராயணத்துடன் கூட்டம் நிறைவேறியது. —கடிதம்.

ஒரேமுறையில் மூவர் கொல்லப்பட்டனர்:—மாத்துறைப்பகுதியில் இருபகுதியாருக்கிடையில் ஒரு தென்னை விஷயமாகப் பிணக்குண்டாக, ஒருவன் மற்றப்பக்கத்தைச் சேர்ந்த ஒருவனையும் அவன் மனைவியையும் மகளையுங் கத்தியாற் குற்றிக் கொன்றுவிட்டனன்.

இரு சிறுமியர் நீருள் மூழ்கினர்:—சென்றவாரம் இஸ்லாமானவர்களின் விரத தினத்தன்று இஸ்லாமானவர் பலர் ஸ்நானம் செய்யும்படி ஜின்தோட்டை ஆற்றுப் பாலத்திற்கு வந்திருந்தார்கள். கட்டுக்கொடீ என்னுங் கிராமத்திலிருந்து ஒரு மனுஷியுடன் வந்த சிறுமியர் ஆற்றில் ஸ்நானம் செய்யும்போது அறியாமல் ஆழமான நீருட் சென்றுவிட்டார்கள். சிறுமியரை ஆறு அள்ளிச் செல்லும்போது, உடன் வந்த மனுஷி மீட்பதற்குத் தன்னால் ஆனமட்டும் முயன்றும் வாய்க்கவில்லை. இவர்களுடைய பிரேதம் இன்னுங் கண்டெடுக்கப் படவில்லையாம்.

வேடரின் கூத்து:—வீரகலைப்பிரிவிலுள்ள வேடரிருவர் கள்ளமாகக் கள்ளுச்சேர்த்து அங்குச்சமீபமாயுள்ள தோட்டங்களிலே வேலைசெய்யும் கூலிக்காரருக்கு இரகசியமாய்விற்றுக் கொண்டுவந்தார்கள். இதனை ஒரு தோட்டத்துரை மதுபரிபாலன இன்ஸ்பெக்டருக்குத் தெரிவிக்க, இன்ஸ்பெக்டர் வேடரின் நாட்டைத் தரிசிக்க, அவரைக்கண்ட வேடரெல்லாம் தங்கள் குடிசைகளைவிட்டுக் காட்டுக்குள் ஓடி மறைந்தார்கள். இன்ஸ்பெக்டரும் அவர்களைத் தொடர்ந்து வெகுபிரயாசையுடன் மேற்குறித்த வேடரிருவரையும் சிறைப்படுத்திக் கோட்டிலே நிறுத்தினர். ஆளுக்குப் பத்துப் பத்து ரூபாய் தெண்டம் விதிக்கப்பட்டது.

ச. வே. பா. கா-ன்.

யானைப் பிரேதம் நதியில் அள்ளுண்டமை:தானாக இறந்த யானையைக் காணுதல் அரிதென்பர். ஆனால் சென்றவாரங் களனிகங்கையில் ஒரு யானையின் பிரேதம் அள்ளுண்டு செல்வதை ஆற்றோரத்தில் நின்றோர் சிலர் கண்டு அப்பிரேதத்தைத் தடமிட்டு அகப்படுத்தலாமென முயன்று வாய்க்கவில்லையாம். இந்த யானை ரத்தினபுரியிலுள்ள நீர்ச்சுனைகளொன்றிலே தண்ணீர் குடிக்கும்படி யிறங்கியிருந்தல்வேண்டுமென்றும், பின்னர் வெளியிலேறிக்கொள்ள முடியாமல் நின்று இறந்துவிட்டதென்றும் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். யானை மிதந்துகொண்டு போகும்போது சில முதலைகள் அதனைக் கடித்துப் பிடுங்கிக்கொண்டு உடன் சென்றனவாம்.

கிழவனுக்கு வந்த இறுதி:—கொழும்பிலே பெரோரா என்னும் 80 வயசுடைய வயோதிபர் ஒருவரைக் கண்டவர்கள் சின்றவர்களெல்லாம் ஆகக், ஆங்க் என்று ஒருபரிகாச நாமஞ்சொல்லியழைப்பார்கள் இது சிலவேளைகளிலே கிழவனுக்குப் பொல்லாத கோபத்தை எழுப்பிவிடும். இப்படியிருக்க 14 வயசுடைய சிங்கோவென்னும் ஒருவன் ஒருநாள் கிழவனைப்பார்த்துப் பரிகாச நாமத்தாலே அழைத்தான். அதனாலே கிழவனுக்கு என்றுமில்லாத கோபம் பிறந்தது. தன்கையிலிருந்த ஊன்றுகோலால் அவனைச் சருவி அடிக்கச் சிங்கோ உடனே கிழவனை விழுத்தி பொல்லைப் பறித்து நன்றாய் மாட்டிவிட்டான். கிழவன் படுகாயமடைந்து அதுகாரணமாக வைத்தியசாலையிலிறந்தான். விளையாட்டுக்காரியம் வினையமாய் முடிந்தது.

ச. வே. பாதுகாவலன்.

---

### தீபாவளி.

(சோதிடகலாநிதியென்னும் பத்திரிகையிலிருந்து அநுவதித்தது)

இமசேது பரியந்தமுள்ள இப்பரதகண்டத்தில் வசிக்கும் ஆஸ்திகச் செல்வர்களாகிய நம்மவர்களால் கொண்டாடப்படும் முக்கிய பண்டிகைகளில் தீபாவளியும் ஒன்றாகும். தீபாவளி என்பதற்குத் தீபங்களின் வரிசை என்று அருத்தம்.

தீபம்ஜ்யோதி பரப்ரஹ்மம் தீபம் சர்வதமோபகம், தீபேநஸர்வ்யர்தேஸர்வம் ஸந்த்யாதீப நமோஸ்துதே.

என்றபடி தீபமே பரப்பிரம்ம சொரூபமாகும். சூரியாஸ்தமயனத்தின்பின் இருளைநீக்கிப்பிரகாசத்தைத் தந்துதவுவது தீபமேயாகும். மங்கள வஸ்துக்களில் இத்தீபமும் ஒன்றாம். இத்தியாதி நியாயங்களால் தேவாலயங்களில் முக்கியமாய் சிவாலயங்களில் ஒன்று இரண்டு மூன்று ஐந்து ஏழு முதலிய திரிகளையுடைய தீபங்களால் ஆராதனை செய்வது வழக்கம். இதுபற்றியே கடவுளுக்குச் செய்யப்படும் பூஜையை தூப தீப நைவேத்தியம் என்று சொல்லப்படுகின்றது. நந்தேயத்தில் ஏதேனும் ஓர் விசேஷ சுபகாலத்திலாவது, உற்சவ காலங்களிலாவது, அரசர்கள் - வள்ளல்கள், பிரபுக்கள் முதலானோர் ஜனனதினம், முடிசூட்டு தினங்களிலாவது எங்கும் விசேஷ தீபங்களை ஏற்றி அலங்கரித்து சந்தோஷிப்பது பண்டைய வழக்கம். பிற தேசத்தினர்களும் இதனை அனுஷ்டித்து வருவது நாம் அறிந்த உண்மையாகும். ஆதலால் உலகத்திற்குப் பெருந் தீங்குசெய்து வந்த அசுரனை ஒழித்து இறைவன் வெற்றிபெற்று ஆன்மகோடிகளுக்கும், தேவர்களுக்கும் சந்தோஷத்தை உண்டாக்கியது ஆஸ்வயுஜமீ கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி திதி விடியற்காலமாதலால் அத்தினம் சந்தோஷத்தின் அறிகுறியாக தீபங்களால் அலங்காரஞ் செய்து பண்டிகை கொண்டாடுவது உலக வழக்கமாகும். வடநாட்டிலும், சில பிற தேசங்களிலும் வசிக்கும் நம்மவர்கள் இந்த நாளில் புது வஸ்திரந் தரித்தல், விருந்தளித்தல் முதலியவைகளை விசேஷமாகச் செய்துவருகின்றனர். தென்னாட்டிலும் இப்பண்டிகை விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது. சிலர் தமது தொழிற்செய்கைகளின் வரவு செலவுக்கணக்கு முடிந்து நூதன கணக்குகளை இந்நாளில் ஆரம்பஞ் செய்வது வழக்கம். இது பெரும்பாலும் வடநாட்டினர் ஒழுக்கமாக இருக்கின்றது.

பூர்வம் மகாபலி என்று ஓர் அசுர சக்கிரவர்த்தி இருந்தான். அவன் இந்திரனிடத்திலிருந்து அக்கிரமமாக தேவராஜ்பத்தை அபகரித்துக்கொண்டான். ஸ்ரீமந் நாராயணமூர்த்தியானவர் வாமனாவதாரமெடுத்து திரும்பவும் வாங்கி இந்திரனிடம் சேர்த்த தினம் இத்தீபாவளிதினமேயாகும். மற்றும் பிராக்ஜோதிஷம் என்னும் பட்டணத்தை ஆண்டுவந்த நரகாசுரனை ஸ்ரீ கண்ணபிரான் கொன்று தேவர்கள், மக்கள் முதலியோர் துன்பத்தை நீக்கி இன்பத்தைக் கொடுத்த தினமும் இத்தீபாவலியேயாகும். இவ்விரு அசுரர்களும் தமது ஞாபகார்த்தமாக உலகினர் தீபங்களால் அலங்கரித்து பண்டிகை கொண்டாடும்படி வரம் பெற்றனர். ஆதலால் அன்று பலிதர்ப்பணம் நரகாசுர தர்ப்பணம் செய்து தீப தானம் செய்தல் வேண்டுமென்று ஸ்மிருதிகளில் கூறப்பட்டிருக்கின்றது. தீபவலியன்றும், அதற்கு முந்திய பிந்திய தினங்களிலும் ஒவ்வொருவரும் தமது

வீட்டை தீபங்களால் அலங்கரித்தல்வேண்டும். வீடுகளில் இருட்டு இல்லாமல் பிரகாசமாயிருக்கும்படி செய்யவேண்டும். எவர்கள் வீட்டில் அன்று தீபம் பிரகாசிக்கவில்லையோ அவர்கள் வீட்டில் தரித்திரம் குடிகொண்டிருக்கும்.

ஆஸ்வயுக்கருஷ்ணபக்ஷஸ்ய சதுர்த்தஸ்யாம் விதுதயே, திலதைலேநகர் தவ்யம் ஸ்நாநம் நாகபீருணே, திலேலக்ஷ்மீ ஜலேகங்கா தீபாவல்யாஸ்து சதுர்தசீம், ப்ராதஸ் நாநந்து ய: குர்யாத்யமலோகம் நபஸ்யதி.

என்றபடி ஆஸ்வயுஜஸ்ரீ கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி திதியானது பிராதகால வியாபியாயிருக்கும்போது சந்திரோதயகாலத்தில் எள்ளெண்ணெயில் ஸ்நாநம் செய்யவேண்டியது. இன்று பஞ்சபர்வமாதலால் தோஷம் இடையாது. தைலத்தில் இலக்குமியும், நீரில் கங்காதேவியும் இன்றுபிரசன்னமாய் விளங்குகின்றார்கள். ஆதலால் பிராதகாலத்தில் அப்பியங்கன ஸ்நானம் செய்தவர்கள் சகல சம்பத்துக்களையும் பெற்று வாழ்வார்கள் என்றும், யமலோகத்தைப் பார்க்கமாட்டார்கள் என்றும் பார்த்தும புராணத்தில் கூறப்பட்டிருக்கின்றது. தீபாவளியன்று பிரதோஷகால வியாபகமான சதுர்த்தசியிலேனும், அப்படி அமையாவிட்டால் பிரதோஷ கால வியாபினியான அமாவாசையிலேனும் நான்கு திரிகளையிட்ட விளக்கை சத்புருஷர்களுக்குத் தானஞ் செய்தவர்கள் நரகபிராப்தியை அடையமாட்டார்கள் என்றும், நாயுருவி, தும்பை இவற்றின் இலையைக் கொண்டுவந்து சிரசில்தேய்த்து ஸ்நாநம்செய்யவேண்டுமென்றும் ஷை புராணம் புகல்கின்றது. அமாவாசை கழித்த பிரதமையன்று பாதாளலோகத்தில் சிரஞ்ஜீவியாய் வசிக்கும் மஹாபலி சக்கிரவர்த்திக்கு பூஜை செய்தல்வேண்டும். இலக்குமியினுடைய கடாட்சத்தைப் பெறுதற்கும், தீர்த்தஸ்நாந புண்யத்தை அடைதற்கும் மற்றை நாட்களைப் பார்க்கிலும் விசேஷ சிறப்புடையது தீபாவலி தினமேயாகும். ஆதலால் அன்பர்கள் ருதிரோத்காரிஞு ஐப்பசிமீ 21உ செவ்வாய்க்கிழமை இரவு விடியற்காலம் 4½ மணிக்குமேல் சந்திரோதயகாலத்தில் அப்யங்கனஞ்செய்து நாயுருவி, தும்பை இலைகளைத் தேய்த்து ஸ்நாநம் செய்து 22உ புதவாரம் தீபாவலி பண்டிகையைக் கொண்டாடுதல்வேண்டும். அறுசுவைப் போஜனங்களைச் செய்து புது வஸ்திரந் தரித்தல்வேண்டும்.

# இந்திய சமாசாரம்.

## ஓர் ஆச்சரியமான சம்பவம்

வங்காளத்தில் உதேபுட்டி என்ற இடத்திலுள்ள ஒருவக்கில் குமாஸ்தாவின் 5வயதுள்ள குமாரன் இறந்துபோனான். அவனுடைய பிரேதம் சுடுகாட்டுக்குக் கொண்டுபோகப்பட்டு எரிக்கப்பட்டது. அடுத்தநாள் அந்தப் பையனின் எலும்புகளைப் பொறுக்கச் சென்றபொழுது அந்தப் பையனின் சில எலும்புகளில் தங்கமும், வெள்ளியும், வெங்கலமும், முத்தும் கலந்திருந்ததாம். அந்தப் பையனின் தகப்பனார் அவ்வெலும்புகளைப் பொறுக்கி வக்கீல் புத்தகசாலையில் பலருக்குங்காட்டினார். பையன் ஆபரணங்களையும் உலோகங்களையும் விழுங்கினதேயில்லையென்று தெரிகிறதென்று "அமிர்தபஜார்" பத்திரிகைக்கு ஒரு நிருபர் எழுதியிருக்கின்றார்.

## திருவள்ளுவர் திருக்குறட் கழகம் முதல் ஆண்டு விழா.

சென்னைத் திருமயிலாப்பூரின்கணுள்ள ஷை கழகத்தின் முதல் ஆண்டு விழா ஞாயிற்றுக்கிழமை (14—10—23) மாலை 4 மணிக்குத் திருமயிலை ஸ்ரீ கபாலீசர் தென்மாட வீதி வன்னிய சத்திரத்தில், பொலீஸ் டெப்டி கமிஷனர் திவான்பகதூர் ச. பவானந்த பிள்ளை அவர்கள் தலைமையில் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அவ்விழாவிற்கு, துறவிகளும், பிரபுக்களும், பண்டிதர்களும், நியாயவாதிகளும், வியாபாரிகளுமாக இரண்டாயிரத்துக்குமேல் விஜயஞ்செய்திருந்தனர். அதுகாலை பண்டிதர் திரு பா. கண்ணப்ப முதலியார் அவர்களால் "திருவள்ளுவர்" என்பதுபற்றியும், உயர் திரு சுவாமி வேதாசலம் அவர்களால் "திருக்குறட் பெருமை" என்பது பற்றியும் மிக அருமையான இரு பெருஞ் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. கடித.


## விளம்பரம்.

இதன்கீழ்க் கையொப்பமிடும் வண்ணார்பண்ணை-மேற்கு சிவசுப்பிரமணியக்குருக்கள் சிவசங்கரஐயராகிய நான் இத்தால் வெளியரங்கப்படுத்துகிறதாவது.

என்பேருக்கு சொடிகாமம் சிதம்பரப்பிள்ளை ஆறுமுகம் 1913ஆ ஐப்பசிமீ 24உ ரூ 500-க்கு எழுதித்தந்த வாக்குமூறிப் பத்திரத்தை இழந்துவிட்டேன் என்றும் இனிமேலக்தவாக் குமுறிப்பத்திரம் பெலனற்றதாக விருக்கும் என்றும் வெளிப்படுத்துகிறேன்.

சி. சிவசங்கரஐயர்,
27-உ அக்டோபர்மீ 1923.

(Mis 406.)


## காந்தி யடிகளின் தேகநிலை:

காந்தியடிகள் எர்வாடா சிறையில் சௌக்கியமாக இருக்கிறாரென்றும் அவருடைய தேக எடை அதிகமாயிருக்கிறதென்றும் ஒரு செய்தி முன்னர் வெளிவந்தது. ஆனால் சமீபத்தில் அச்சிறையினின்றும் வெளியான ஸ்ரீமாந் பன்சாலி என்பவர் பின்வருமாறு பத்திரிகைகளுக்குத் தெரிவிக்கின்றார்:—

"மகாத்மாஜி 150 பவுண்டு இருக்கிறாரென்று சொல்லப்படுகின்றது. அவருடைய சாதாரண எடை 104 பவுண்டே. அவர் முன்போலத் தேகசௌக்கியமடைந்து வருகிறாரென்றுகூறப்படுவது உண்மைக்குமாறானதாகும். அவர் சிறைக்குச் செல்வதற்கு முன்னும சிறைசென்ற சிறிதுகாலம்வரையிலும் ஒன்றரைப்பவுண்டு ரொட்டியும் பாலும் பழமும் ஆகாரமாக எடுத்துக்கொண்டிருந்தார். ஆனால் சென்ற ஐந்துமாத காலமாக ரொட்டிசாப்பிடுவதை நிறுத்திவிட்டார். வயிற்றுவலியாலும் மலபந்தத்தாலும் இடையில் துன்பப்பட்டார். புனு தண்ணீர் சிறிதுகாலம் இவருக்கு ஒத்துக்கொள்ளாமலிருந்தது. இப்பொழுது இவருக்கு எவ்வித தொந்தரவும் இல்லை. என்றாலும் முன்போல் இவர் சௌக்கியமாயிருக்கிறாரென்று சொல்லப்படுவது சரியாகாது. ஆனால் இவர் நாளுக்குநாள் தேகஎடையில் குறைந்துகொண்டுவருவது பலருக்குக் கவலையுண்டு பண்ணிவருகிறது."

காந்தி தாசர்கள் இச்செய்தியைக் கேட்டு மனங் கலங்குவார்கள் என்பதில் ஐயமில்லை. ஞானிகள் மனோசக்தியையே விரும்பிநிற்பார்கள். ஞானிகளின் நிலையை இந்த அரசாங்கத்தார் அறிவரோ? நவசக்தி.

## இந்தியா விரும்புவது எது?

### சர்வசமுக ஒற்றுமை.

லாலா லஜபதிராய், பத்திரிகைகளுக்கு ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையைப்பற்றி அரியதொரு கட்டுரை வரைந்திருக்கின்றார். அதன் சாரம் வருமாறு:—

"இந்துக்கள் முகமதியர்கள் ஒற்றுமை என்பதனால், இந்நாட்டில் பிறந்து பல பிரிவினராயிருக்கும் இந்தியர்கள் ஒன்றுபடுதலென்று பொருள் ஏற்படும். இந்திய ஜனங்களில் இந்துக்களும் முகமதியர்களும் பெருந்தவகுப்பார்களாவர். அவர்கள் ஜனத்தொகையில் பெருந்தவர்களா யிருப்பதுமன்றி மற்றவகைகளிலும் முதன்மையானவர்களா யிருக்கிறார்கள். முகமதியர்களில் ஒரு சிறு பகுதியினர் அன்னியநாட்டாரின் சந்ததியார்களாவர். மற்றவர்கள் இந்துக்களுடன் சேர்ந்தவர்களாவர். ஜெயினர்கள் விஷயத்திலும் சீக்கியர்கள் விஷயத்திலும் அவ்வாறே கூறப்படலாம். கிறிஸ்தவர்களிலும் பார்சிக்காரர்களிலும் பெரும்பாலரர் அயல் நாட்டாரின் சந்ததியார்களாவர். புத்தர்கள் விஷயத்திலும் அவ்வாறே கூறப்படலாம். புத்தர்கள் பர்மா மாகாணத்தில் வசிக்கிறார்கள். அந்த மாகாணம் இந்திய அரசாங்கத்தில் சேர்க்கப்பட்டிருந்தபோதிலும் இந்தியாதேசத்தில் சேர்ந்ததாகாது. ஆதலால் நாம் அவர்களைப் பற்றிக் கவனிக்கவேண்டியதில்லை. அவர்கள் இந்தியர்களுடன் சேர்ந்திருக்கவேண்டுமென்று நமக்கு விருப்பமில்லை. இந்தியாவிலுள்ள மற்ற வகுப்பார்களில் சீக்கியர்களும் ஜெயினர்களும் இந்துக்களுடன் சேர்ந்தவர்களாவர். முகமதியர்களிலும் கிறிஸ்தவர்களிலும் பெரும்பாலர் இந்துக்களின் சந்ததியார்களாக இருந்தபோதிலும் அவர்கள் இந்தியர்களாற்கையாளப்படாத முறைகளைக் கையாளுகிறபடியால், அவர்கள் அநுஷ்டிக்கும் முறை இந்துக்கள் அனுஷ்டிக்கும் முறையும் இந்துக்களால் அனுஷ்டிக்கப்படாதமுறையும் கலந்ததாயிருக்கின்றது. இந்த வகுப்பார்களையெல்லாம் ஒரேவகுப்பாராக ஏற்படுத்துவதற்கு நாம் எண்ணங்கொள்ள வேண்டியதில்லை. ஆனால் அவர்கள் ஒற்றுமையாயிருக்குமாறு தக்க காரியங்கள் செய்யப்பட வேண்டும். இந்த வகுப்பார்களில் ஒரு வகுப்பார் இன்னொரு வகுப்பாருடன்சேர்ந்து ஒரே வகுப்பாராக ஏற்படுவதற்கு நாம் எண்ணங்கொள்ள வேண்டியதில்லை. ஆனால் இந்த எல்லா வகுப்பாரைச் சேர்ந்த ஜனங்கள் குறைவுபடாமலும் அவர்களுக்கு யாதொரு கஷ்டமும் நேரிடாமலும் அவர்கள் எல்லோரும் ஒற்றுமையாயிருக்குமாறு தக்க காரியங்கள் செய்யப்பட வேண்டும். இந்துக்கள், முகமதியர்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், ஜெயினர்கள் ஆகிய இவர்கள் இந்தியர்களாயிருப்பதற்குத் தத்தம் வகுப்பாராயிருப்பதை விட்டுவிட வேண்டியதில்லை. அவர்கள் இந்தியர்களாகவும், முகமதியர்களாகவும், கிறிஸ்தவர்களாகவும், இன்னும் மற்றவகுப்பார்களாகவும் இருக்கலாம். அவ்வாறு இருக்கமுடியுமா? இருக்க முடியும். அவ்வாறு இருக்கும்படியாக நாம் தக்ககாரியங்கள் செய்யவேண்டும். இல்லாவிடில், நாம் பல பிரிவினராயிருக்கும் இந்தியர்கள் ஒரு வகுப்பாராக ஏற்படவேண்டுமென்று நினைப்பது வீணாகும். இந்துக்களாவது அல்லது முகமதியர்களாவது திரவியத்திற்காவது அல்லது ஒரு தேசத்தை ஆட்சிபுரியவாவது தம் வகுப்பாரினின்று விலகி மற்றொருவகுப்பாருடன் சேர்ந்துகொள்வார்களென்று நாம் எக்காலத்திலும் நினைப்பதற்கில்லை. அவர்கள், தத்தம்மதவிஷயங்களில் அதிக பற்றுக்கொண்டவர்களா யிருக்கிறார்கள். அவர்கள் தத்தம் மதவிஷயங்களை அலட்சியஞ் செய்யமாட்டார்கள்.

### பிற்காலத்தில் நிகழக்கூடிய விஷயங்கள்.

அவர்களில் ஒருவகுப்பார் பிற்காலத்தில் பலாத்காரத்தைக் கையாண்டு தேசத்தை ஆட்சிபுரியலாம். ஆனால் அத்தகைய ஆட்சி ஒரு மன்னருக்கு உட்பட்டு ஜனங்கள் புரியும் ஆட்சியாகாது. அத்தகைய ஆட்சி இந்துக்கள் அல்லது முகமதியர்களின் ஆட்சியாயிருக்கும். அத்தகைய ஆட்சி நம்நாட்டில் ஏற்படவேண்டுமென்று நாமாகிய தேசியவாதிகளும் மிதவாதிகளும் எண்ணங்கொண்டில்லை. ஒருமன்னருக்கு உட்பட்டு ஜனங்கள் புரியும் ஆட்சியே நம்நாட்டில் ஏற்படவேண்டும் என்று நாம் எண்ணங் கொண்டவர்களாயிருக்கிறோம். அத்தகைய ஆட்சி எவ்வாறு ஏற்படுவது? அந்த விஷயத்தில் நாம் போதுமான அளவு அக்கறை செலுத்தவில்லை. இங்கிலாந்து அரசாங்கத்தார் நம் நாட்டை அரசுபுரிவதை விட்டுவிட்டால், நம் நாட்டில் இப்போது வகுப்புபேதம் பாராட்டப்படுவது நீங்கிவிடாது. ஒரு மன்னருக்கு உட்பட்டு ஜனங்கள் ஆட்சிபுரிவதற்கு அவசியமாகிய ஒற்றுமை பலவகுப்பாருக்குள் ஏற்படுவதற்குத் தக்க காரியங்கள் செய்யப்படவேண்டும். அக்காரியங்கள் என்னவென்பது கண்டறியப்படவேண்டும். நவசக்தி.

# கடிதம்.

## பருத்திச் செய்கை.

பருத்தி, இது வெண்டைக் குடும்பத்தைச் சார்ந்தது. இது உஷ்ணதேசப் பயிர். இது விசேஷமாய் உஷ்ணபாகங்களாகிய எகிப்து, அமெரிக்க ஐக்கியமாகாண தென்பாகங்கள், இந்தியா முதலான தேசங்களில் அதிகம் விளைவிக்கப்படுகின்றது. இலங்கையிலும் குளிரான பகுதி நீங்க கீழ்க் காணும் வளப்பங்கள் பொருந்திய உஷ்ணமான பகுதிகளில் நற்பலனைக் கொடுக்கும்.

பருத்தி விதைத்ததின்பின் மூன்றுமாசகாலமும் ஒரே மாதிரியாக மழை பெய்து வருவதும், அதிகநாளைக்கு மழையின்றி பெருமழைகள் வருஷித்து வருவதிலும் இடையிடையே சொற்பம் சொற்பமாக பெய்து வருவதும், நல்லது. நான்காம் மாசத்தில் பெருமழை ஆகாது. அக்காலம் பூப்பிடிக்குங் காலமானதினால், பெருமழை விழுந்தால் பூக்களும் கண்ணிகளும் கொட்டிண்டுவிடும். நான்காம் மாசத்தின் பின் மழை யின்றி இருப்பதே நல்லது. பெருமழை பெய்யுமாகில் பஞ்சு சேர்க்கத் தடையாகிப் பஞ்சு பழுதாகும். பருத்திச் செய்கைக்கு முக்கியமாய் தேசசுவாத்தியமே கவனிக்கவேண்டியதென்பதும் இல்லாதுவிடில் நற்பலனைக் கொடாதென்பதும் மேற் கூறிய வற்றால் தெள்ளிதிற் புலப்படும்.

இலங்கைப் பயிர்ச்செய்கைக் கழகத்தார் இவ்விஷயத்தில் சோதனைகள் பண்ணி அம்பாந்தோட்டை டிஸ்திறிக்கில் விசேஷ பலனைக் கொடுக்கின்றது. கொலன்னு கோறளையிலும் சில பகுதிகளில் தகுந்த பூமியுண்டென்றும், வருஷாந்தத்தில் பெரும்பாலும் அதிக மழை பெய்தாலும் வடமாகாணத்திலும், வடமத்தியமாகாணத்திலும் நன்றாய் வருமென்றும், இவ்வண்ணமே வருஷாந்தத்தைத் தவிர்த்து விதைத்தால் கிழ்மாகாணத்திலும் நல்லாய் வருமென்றும், ஊவாமாகாணத்தில் சில பகுதிகளிலும், மத்தியமாகாணத்தில் மாத்தளை டிஸ்திறிக்கிலும் பருத்தி விருத்தியடைதற்கு இடமிருக்கின்றதென்று கண்டிருக்கின்றார்கள்.

நிலம் வேண்டிய அளவு பண்பாடு உள்ளதாக வாக்கிக்கொள்ளல்வேண்டும். சமமாயிராவிடின் நிலம் அவ்வளவு நன்மையாயிராது. நிலம் அதிக கடுத்த மண்ணும், மெல்லிய மண்ணும் உள்ளது ஆகாது. சிறுகாடு பற்றைக் காடுகளில் புல் பூண்டுகளை யழிந்து போம்வண்ணம் நன்றாய்ச் சுட்டுவிடவேண்டும். புல் பூண்டு முதலியன பருத்தியின் வளர்ச்சிக்குப் பெரிதுந் தடையாயிருக்கின்றது. நன்றாய் சுட்ட சாம்பல் பசளையாக உதவும். முதல் வருஷம் காட்டுநிலத்தை வித்திடும் நிரையை நன்றாகக் கொத்திவிடவும்; மறுவருஷங்களில் ஏகமுங் கொத்தி உழுது பண்பாடாக்கிக்கொள்ளவும்.

வித்து நல்ல சாதியாக இருக்கவேண்டும். நல்லவித்தாயின் குளி ஒன்றுக்கு 4, 5 வித்து போதும். முளைக்குந் தத்துவங் குறைந்ததாயின் கூடிய தொகையானவை விதைக்கப்படவேண்டும். எப்படியாயினும் ஏக்கருக்கு 10 ரூத்தல் போதும். நல்ல நிலமாயிருந்தால் 4 அடி வீதம் வித்திடவும், நன்றாய்ப் பலிதம் கொள்ளாத நிலத்தில் மற்றைய நிலத்திலும் நெருக்கி நாட்டலாம். ஒரு குழியில் 3, 4 கன்றுகள் நின்றால் 9 அங்குல உயரமானபின் 2 கன்றுகளை விட்டு எஞ்சியவைகளைக் களைந்துவிடல்வேண்டும். கன்றுகள் இல்லாத குழிக்கு வித்தே போட்டு உண்டாக்கவேண்டும். பிடுங்கி நடுவது உதவாது. களை பிடுங்காவிட்டால் பலன் குறைந்த விளைவே கிடைக்கும். களை பிடுங்குவதால் பலனுண்டு. பருத்திக் கன்றுகள் ஏறக்குறைய இரண்டடி உயரமானபின் களைபதிக்கும்போது 2, 3 அங்குல உயரத்துக்கு மண் அணைத்துவிடவேண்டும். அது அவைகளைக் காற்றடியினின்றும் காப்பாற்றிக்கொள்ளும். ஒரு நிலத்தின் முதற்பயிருக்கு பசளை அவசியமின்று. மறுமுறை முக்கியமாய் வித்திடுவதற்குமுன்னே போதிய பசளை விடவேண்டும். நோய்கள் பூச்சிகள் உள்ள இலைகளைக் கன்றுகளை உடனே பிடுங்கிச் சுட்டுவிடுவ தவசியம். பயிர் போகக் கடைசியில் கட்டையைப் பிடுங்கி எரித்துவிடுவது அவசியம். சில பருத்திகள் முன்னேறிக் காய்த்து வெடிக்கும். அவையை அப்படியே விட்டுவிட வேண்டும். கொஞ்சங் கொஞ்சமாக எடுக்கக் கட்டமாட்டாது. பஞ்சு சுத்தமாக எடுப்பதில் அதிக கவனஞ் செலுத்தல்வேண்டும். பஞ்சின் சுத்தத்திற்குத் தக்கதாக வேலையும் இருக்கும். பிரயாசைப்பட்டும் சுத்தமாக எடுத்தால் பின் அத்தியந்த சந்தோஷத்தை யடையலாம். ஒரு தொகைச்சிப்பத்தில்,ஒருசிப்பம் அழுக்குள்ளதாயிருந்தால் சிப்பம் முழுவதின் மானத்தையுங் கெடுக்கும்; நஷ்டத்தையும் உண்டாக்கும்; உனது பஞ்சு மிகவுஞ் சுத்தமான சரக்கு என்ற பெயரை ஒருமுறை பெறுமானால் எந்நாளும் அதற்கு விலைமானமுண்டு. சூரத்தோடும் காய் நன்றாய்ப் பழுத்து வெடிக்கமுன்னும் பஞ்சு சேர்க்கலாகாது. ஐப்பசிமாதம் விதைத்தால் தைக் கடைசியில் முதன்முறை எடுக்கலாம். என் சிற்றறிவுக் கெட்டியதை ஈண்டு இவ்விடம் வரைந்தேன். மற்றவர்களும் தங்கள் தங்களுக்கு எட்டியதை எழுதி வருவார்களென நம்பி பரம்பொருளை முன்னிட்டு இவ்வளவில் முடிக்கின்றேன்.

இப்படிக்கு,
"விவசாய விர்த்தி அபிமானி",
மேலைப் புலோலி.

## தமிழ்மக்களின் நவநாகரீகம்.

நம் நாட்டுத் தமிழ்மக்கள் தம்முன்னேற்றத்தை இலக்காகக்கொண்டு பலதுறைகளிலும் புகுந்து உழைக்கின்றார்கள். புதுப்புதுச் சபைகள் தாபனஞ்செய்ய முயலுவோரும் பத்திரிகைகள் வெளியிடத் தொடங்குவோரும் இன்னும்பல வேறுபொதுக்காரியங்களிற் கையிடுவோருமாய் நம்நாடு தேசாபிமானிகளால் நிறைந்துகிடக்கின்றசீரை நோக்குபவர், வருங்காலத்தில் நம் சாதியத்தாரின் முற்போக்கை வெளிப்படக்காட்டும் சிறந்தஅறிகுறிகளாக உணர்ந்து மகிழ்வர். அஃதுண்மையே. நெடுங்காலம் அடிமைத்தனமாகிய பேரிருளிற்சிக்குண்டு, அதைஈனமென் றுணருமாற்றலின்றியவர்களாய், அதுவே மானிடப்பிறப்பின் பெரும்பேறெனமதித்து உழன்றனுத்தநாம், சுதந்தர ஒலிகேட்டு விழித்துக்கொண்டு நம் இழிந்த நிலையை மெல்ல மெல்ல நோக்குங்கால், நம் முற்போக்கை உடனிருந்து தடுத்துக் கெடுத்த ஒழுக்கவழக்கங்கள் பண்டைப் பயிற்சிவயத்தால் தலைகாட்டிநின்று ஆரவாரம் பண்ணுமேனும் காலகதியில் அவை ஒழிந்திடுதற்கு ஐயமில்லையென்று மனிதனின் ஆரோகணசக்தியினியல்பை அறிந்தோர் கூறுகின்றனர். ஆயினும், அம்முற்போக்கிற்குக் காரணமாகிய முயற்சிகளோடுடனிகளும் விபரீதங்கள் நல்லறிஞர்க்கு வியப்பையும் விசனத்தையும் தருதல் ஒருதலையாம்.

தமிழ்ப் பாஷையின் அபிவிருத்தியையும் தமிழ்மக்களின் முன்னேற்றத்தையும் கருதிக் கூட்டப்படும் மகாசபைகளிலெல்லாம் ஆங்கிலம் கற்றோரே கற்றோராக மதிக்கப்படுகின்றனர். அத்துடன் வெள்ளைத் துரைகளைப் போலத் தம்மை அலங்கரித்துக்கொண்டு செல்பவர்மட்டுமே அச்சபை நிர்வாகிகளால் "பொன்மலர் நாற்றமுடைத்து" என்பதுபோல சன்மானிக்கப்பட்டுத் தலைப்பந்தியில் இடமும் பெறுகின்றனர். தமிழ் கற்றோரும் தேசிய உடைதரித்துச் செல்வோரும் அவர்பார்வையிற் பேதைகளாபொதுக்கப்பட்டு அவமானமடைகின்றனர். அவரது தமிழறிவு எத்துணை உயர்ந்ததாயினும் ஆங்கிலக்கல்வி போடுகூடாதாயின் சூரியனது சன்னிதானத்தில் மங்கிக்கிடக்கும் விளக்குப்போல மணம்பெறமாட்டேனென்கிறது.

மகாசபைகள் கூட்டுவோரின் செயலிங்ஙனமாக, தமிழ்ப்பாஷையைப் புனருத்தாரணம் செய்யவிரும்பும் ஆங்கிலக் கல்விமான்களின் செயலோ அப்பாலும் போகின்றது. இருபாஷைகளிலும் பாண்டித்தியம் படைத்த ஒருவர் ஆங்கிலபாஷையிலெழுதப் பட்டிருக்கும் நூல்கள் தமக்குப்பேரின்பம் விளைக்கின்றனவாம். ஆதலால் தமிழ்ப்பாஷையையும் ஆங்கில நடைக்கிணங்கச் சீர்திருத்தம் செய்தல் வேண்டுமென்கிறார். தமிழ்நூல்கள் அவருக்கு இன்பம் விளைக்கத் தவறினமை அப்பாஷையின் துரதிஷ்டமே போலும். பரிதாபம்! வேறொருவர் ஒரு பொருள் குறிக்கும் பலசொற்களும் சாதாரண வழக்கிற்கு வாராத பதங்களும் காலகஷ்டம் விளைத்து அறிவுமுற்போக்கைத் தடுத்தலால் தமிழ்ப்பாஷையில் மிகையான பதங்களையும் கடின இலக்கணங்களையுங் கழித்து அவசியம் வேண்டிய திசைச்சொல் வடசொற்களையும் புதிய இலக்கணங்களையும் ஏற்றுத் தமிழைப் புனருத்தாரணஞ் செய்யவேண்டுமென்றும் அப்படிச் செய்தால் தேவார திருவாசக

முதலிய பிரபந்தங்களின் கதி யாதாகுமோ என்று ஒருவரும் அஞ்சவேண்டியதில்லை என்றும் அவை இருந்தபடி இருக்கலாம் என்றும் கூறுகிறார். இவர் இவ்வாறு கூறுவதனர்த்தம் நமக்குப்புலப்படவில்லை தொல்காப்பியம் முதலிய பழைய இலக்கண நூல்களுட் கடின விதிகளைக் கழித்து எஞ்சிய சிலவற்றுடன் சில புதிய விதிகளும் கூட்டி ஓர் நவீன இலக்கண நூல் செய்யப்படவேண்டுமென்கிறார். ஆங்கிலந் தெரியாத சுருங்கிய அறிவுள்ள தொல்காப்பியர் முதலியோராற் செய்யப்பட்ட நூல்கள இக்காலத்து விரிந்த அறிவாளிகளுக்குப் பொருந்தா என்பது வியப்பன்று.

தேவார திருவாசகாதி பிரபந்தங்களிற் சிறிது இரக்கம் பாராட்டி, அபயங்கொடுத்தது நாம் பண்டு செய்த பூசாபலமே. அதுவும் பொருள் காண விரும்பாது பக்தி கருதிப் பாராயணஞ் செய்வோர் பொருட்டு பொருள்காண விரும்புவோரும் பலருளராதலால், அவர்க்குக் காலகஷ்டம் விளையாமைப் பொருட்டு அவையுந் திருத்தப்படவேண்டியவைதாமே. எனைத் திருக்குறண் முதலிய இலக்கியங்களில் ஒரு பொருள் குறிக்கும் பலசொற்கள் வருமிடந்தோறும் அப்பலசொற்களைக்கழித்து ஒரு சொல்லையே பெய்தும், கடினபதங்கள் வருமிடங்களில் அவற்றை யொழித்து இலகுவான பதங்களைச் சேர்த்துப் புதிய பதிப்புகள் வெளிப்பட வேண்டுமோ. திருவள்ளுவர் முதலியோரும் ஆங்கிலந் தெரியாதவர்களாதலால் முன் யோசனையின்றி அவ்வாறு செய்துவிட்டார்கள். என்செயலாம். முன்கூறியபடி கழித்தலுங் கூட்டலுஞ் செய்தாற்றான் சீர் தளை முதலியன முட்டுற்றுப் பழைய இலக்கண விதிகட்குப் பொருந்தவனவன்றாகலால் அவற்றின்பொருட்டும் புதியவிதிகள் வேண்டப்பட்டிருத்தலின் முற்றும் புதியதொரு இலக்கணநூல் சமைத்தல்தான் புத்திக்கிசைந்ததாகும். என்னே விவேகத்தின் பெருக்கம்!

இனி "இலக்ஷ்மி" எனப் பெயரிய புதிய மாதாந்தப் பத்திரிகை யொன்றில், ஆங்கிலவித்பத்தியாளரும் தமிழரொருவர் வெகு விநோதங்களெல்லாஞ் சொல்லுகிறார். "ஆங்கில அறிவில்லாத வெறுந் தமிழர்கள் புராணம் முதலியவற்றில் இல்லாததை வர்ணித்தெழுதத் தெரிந்தவர்களேயன்றி ஆங்கிலந் தெரிந்தவர்களைப்போலக் கண்டவற்றை யுள்ளபடி சொல்லுமாற்றலற்றவர்களென்றும் தருமம், சத்தியம் முதலியவற்றைப்பற்றி எதும் உதாரணம் வேண்டுமானால் ஆங்கிலேய பண்டிதர்களது நூல்களிற்றான் பார்க்கவேண்டுமென்றுங் கூறுகிறார். இவர் திருக்குறள் நாலடியார் முதலிய நீதி நூல்களையேனும் கேள்விப்பட்டிலரோ. இவர் கூறிய புராணங்களில் தரும முதலியவற்றை விளக்கும் எத்தனையோ கதைகளுளவே. ஆனால் அவையெல்லாம் வெறும் தமிழர்களாற் செய்யப்பட்ட வெறும் நூல்கள் என்னும் எண்ணத்தினால் படித்துப்பார்க்க மனம் பொருந்தாதொழிந்தனர்போலும்.

இவரெல்லாம் பாஷையிலும் நூல்களிலும் மோதி அலமுறுவாராக. இப்பத்திரத்திற்கு முன்னொரு பிரசுரத்தில் யாம் கூறியபடி ஆன்மா ஐந்தவுன்சு என்றும் மூன்றவுன்சு என்றும் மேலைத்தேச பண்டிதர்கள் ஆங்கிலபாஷையிலெழுதியிருப்பதனால் அது 'அனுபவமுறையான கருத்து' என்று பராட்டிய ஐயரவர்கள் சமயக் கொள்கைகளிலும் முட்டிவிட்டார்.

எத்தனை விபரீதக் கொள்கைகளேனும் ஆங்கிலபாஷையி லெழுதியிருக்கக் கண்டால், அதிலும் ஆங்கிலேயர் எழுதிவிட்டிருந்தால், அவை உயர்ந்த அனுபவமுடைய உண்மைகள் என்னும் பிரமை நம்மவர்களுள் வெகுஎளிதாய் நுழைந்துவிடுகிறது, சிறிது ஆங்கிலவித்பத்தி வந்துவிடுமேயானால் புத்தியில் பிரகஸ்பதிதானும் தமக்கிடல்லவென்று நினைக்கிறார்கள். தமிழிலுங் கொஞ்சந் தெரிந்துவிட்டால் தமிழ்நூற் கடலையெல்லாம் தாம் பருகிவிட்டதாகக் கொண்டு விபரீதத்துறைகளி லிறங்கிவிடுகிறார்கள்.

உண்மையில் வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டு விளங்கும் சிவஞானபோத நூலினை மொழிபெயர்ப்பு நூலெனச் சொல்லநாணித் தம் தவறுதலான கொள்கையை நாட்டுதற்கும் போலி யாதாரங்கள் தேடித்திரிந்து பொறுகருகின்ற புலவர்கள் சிலர் தம்பாஷையை ஆங்கிலமொழிக்சேற்கத் திருத்தியும், கழித்தும் கூட்டியும் புதுக்கி அழகுபார்க்க அவாவுதல் வியப்பினும் வியப்பே.

இங்ஙனம் நவநாகரிகமானது புலவருள்ளத்திலும் புகுந்து அலைக்க, அதனால் ஆங்கிலமொழியி லெழுதியிருப்பன யாவும் பேரின்பம் பயப்பனவாயும் அநுபவமுறையானவையாயும் தோற்ற அம்மயக்கினால் தமது பாஷையையும் சமயத்தையும் ஆங்கிலீகரிக்க விரும்பும் இக்காலத்தில் 'வைத்திலிங்க'மென்பவர் உண்டுடுத்துக் குடித்து மகிழ்தலுக்கென்றே பிறந்திருக்கும் ஆங்கிலேயரைப்போல்தாமும்உண்டுடுத்து ஒழுக விரும்புதல் தவறுடைத்தன்று போலும். புலவர்கள் ஆங்கிலேயர் சொல்வன யாவும் சரியென்று கொண்டு, அவர்கள் சொல்வது போல நாமுஞ் சொல்லவேண்டுமென்கிறார்கள். நமது F. M. S வைத்தியலிங்கமோ அவர்கள் செய்வன யாவும் சரியென்று கொண்டு நாமும் அப்படியே "பிலுக்காய் மினுக்காய்" செய்ய வேண்டும் என்கிறார். இதில் பேதம் யாதுளது.

இங்ஙனம்,
மு: சிற்றம்பலம்,
ஏழாலை.

---


# விளம்பரம்.

பென்சில்வேனியா

(U. S. A.)

பெற்றோலியம்

புறடெக்ஸ்.

"சிங்கமார்க்"போட்ட திறம் மண்ணெண்ணெய். இது சுத்ததண்ணீர் போன்றது; புகைக்கமாட்டாது; திரியைக் கருக்கமாட்டாது; கண்ணுக்கு மிகவும் நல்லாய் இருக்கும்; துர்நாற்றமற்றது; நல்ல ஒளியைக் கொடுக்கும்- ஷை எண்ணெய் விற்பதற்கு யாழ்ப்பாணத்திற் பிரதான சந்தையுள்ள எல்லா இடங்கட்கும் ஏசண்டுமார் தேவை.

K. V. மார்க்கண்டன் & பிறதர்,

இலங்கை ஏசண்டுகள்.

இவைகளைப்பற்றிய விபரம் எம்மிடம் அறிந்து கொள்ளலாம்.

A. S. கந்தையா,

யாழ்ப்பாண ஏசண்டு,

வட்டுக்கோட்டை.

(Mis. 403).

---

## விளம்பரம்.

இத்தாற்சகலருமறியும்படி வட்டுக்கோட்டை மேற்குக் குடி வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளையாதொரு மரணசாதனம் அல்லது வேறு எவ்வகையான சாதனங்களும்செய்யாமல் 1923ஆ ஐப்பசிமீ 21உ காலஞ் சென்றுவிட்டாரெனபதையும் அவருடைய எவ்வகையான சொத்துக்களும் ஞாயமான கோட்டுக்கட்டளைப்படி உரிமைத்தத்துவ வழக்கில் அவரின் உரிமைக்காரருக்குச் சேரவேண்டியதென்றும் இத்தால் வெளியரங்கப்படுத்துகிறேன்.

ஆறுமுகம் செல்வத்துரை.

வட்டுக்கோட்டை-மேற்கு,
27—10—1923.
(Mis. 404.)

---

## ஓர் பிராமணோத்தமர் தேவை.

சிலங்கூர் இலங்கைத் தமிழர்சங்கத்தாரால் நடத்தப்படும் கோலாலம்பூர் 'ஸ்கொற்' வீதியிலிருக்கும் கந்தசுவாமி கோயிலுக்கு ஓர் பூசகர் வேண்டும். அவர் கந்தபுராணம், பெரியபுராணம், இராமாயணம், திருவிளையாடல் முதலான நூல்களுக்கு நன்றாயர்த்தம்பண்ணக்கூடியவராயும், இலக்கணம் படித்தவராயும், சம்ஸ்கிருதத்தில் போதிய அறிவுடையவராயும், உலகம் மதித்த வித்துவான்களினுடைய முறைமையான மாணவராயும், பரம்பரையான பிராமண குடும்பத்தைச்சேர்ந்தவராயு மிருக்கவேண்டும். அத்துடன் உற்சவாரம்ப(துவஜாரோகண)த்துக்கும், இரதோற்சவம் முதலியனவற்றிற்கும் உரியவராயிருக்கவேண்டியது. அவர் மிக மதிப்பாய் நடத்தப்படுவார். விபரங்களைக் காரியதரிசியிடம் அறிந்துகொள்ளுக.

சி. கந்தையா,
ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
(Q. 42) காரியதரிசி.

---

## தேக்கமரம்.

திறமான பர்மாதேச தேக்கமரத் தீராந்திகள். நீளம், 10 அடி தொடக்கம் 35 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலந் தொடக்கம் 18 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்குக் கிடைக்கும்.

S. வீரகத்திப்பிள்ளை,
(H. 16.) தொண்டமானாறு.

---

## "பணம்" "பணம்"

"பணம்" இதென்ன விளம்பரம்? "பணம்" என்னும் பத்திரிகையைப் பற்றியதோ? ஆம். "பணம்" என்னும்பெயரைக் கேட்டளவிலேயே உள்ளம் இன்பக்கடலாடுகின்றது. இது ஒரு தமிழ் வாரப்பத்திரிகை. இதன் ஆசிரியரை நாம் நெடுங்காலமாக அறிவோம். செந்தமிழ்நாட்டில் சிறுவர் சிறுமியர் முதல் விருத்தர் ஈறாக யாவரும் மனமுவந்து வாசிக்கக்கூடிய பத்திரிகை "பணம்" பத்திரிகையேயாகும். ஒருவாரத்தின் செய்திகள் அத்தனையும் ஒன்றுகூட விடாமல் தன்னகத்தே தாங்கி நிற்கும் திறன் "பணம்" பத்திரிகைக்கு உண்டு. இவ்வொரு பத்திரிகையைமட்டும் வாசித்தால் ஒரு தினசரிப்பத்திரிகையைத் தொடர்ந்து வாசிப்பதிலும் அதிகமான சங்கதிகளை அறியலாம். உடனே "பணம்" பத்திரிகையைப் பெறுங்கள். சந்தாதாரராகுங்கள். வருடமுடிவில் ஒருபுஸ்தக உருவமாகக்கூடிய சிறப்புடையது. உடனே எழுதுங்கள். உங்களுக்கு இது அவசியமான பத்திரிகை. வருடச்சந்தா ரூபாய் ஐந்து.

விலாசம்:—மானேஜர் "பணம்"
ஆபீஸ், திருச்சி.

---

## உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

### மன்மத கோலாகலக் குளிகை.

இது ஒன்றே திவ்விய அவுஷதம்! மகா அருமையானது!! ஆச்சரியமான குணமுள்ளது!!!

இது புஷ்டிக்கு நிகரற்ற மருந்து. இதற்குச் சமமான தொன்றுமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். ஜீரணம், இரத்த விர்த்தி, இந்திரியக் கட்டு, புஷ்டி உண்டாகும். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சக்திக்குறைவு, இடுப்புவலி நீங்கும். இழந்த பலமும், ஆண்மையும் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இன்பத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும். உத்தரவாதமுள்ளது. 120 குளிகை ரூபா 10. 60 குளிகைக்கு ரூபா 5. 30 குளிகை ரூபா 3. மாதிரிக்கு 20 குளிகை ரூபா 2.

### மூலத்திற்கு குருநாக பஸ்பம்

ஆப்ரேஷன் அவசியமில்லை; முளை தானே கரையும்; சீழ்மூலம், இரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலியமூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்தரவாதமுள்ள சிறந்த அவுஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

### இருமலுக்கு குருதாளக பஸ்பம்.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்டசுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சீக்கிரம் தீரும்; எட்டுவித காசமும் தீரும். புட்டி ரூபா 4

### பிரமேக நிவாரணி

வெள்ளை, வெட்டை, தந்திமேகம், நீர்க்கடுப்பு, குத்து உடனே நிற்கும்; மூன்றுவேளையில் குணமாகும்; தவறாது. மிக்க அநுபவமானது. புட்டி ரூபா 2.

### மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகல வசியம், தன லாபம், நினைத்தகாரியசித்தி, தொழிலபிவிர்த்தி, புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும்; செய்வினை, பேய் பிசாசு நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2. 6 சத்துகள் ரூபா 10.

பரம்பரையும் அநேக பரிசுகள்
மெடல்கள் பெற்ற
C மலையப்பசாமிபிள்ளை,
நித்தியானந்த மேடிக்கல் ஹால்,
(H. 19). பழனி. S. I.

---

[ESTABLISHED 1909].

## MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
### Kairul Muslimeen Medical Hall
### PORTONOVO (SouthArcotDistrict).

வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா 1000 இனாமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் — சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லா இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஓர் புருஷசஞ்சீவியாகின்றது. மற்ற விபரங்களை நமது கேட்லாக்கில் காணலாம்.

### லேகியத்தின் முக்கிய குணமாவது

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, எழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஒடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனனுகூல நன்மைக்காகவே இத்தனை மிகவும் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.

வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபால்சிலவு இனாம். பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷையூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது ஷை குருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனாமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனாமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினாலாவது முன் கண்ட இனாம் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address:
Khader Brothers
Porto-Novo.

என்மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை தென்னாற்காடு ஜில்லா.
(Y. 19).

---

## விளம்பரம்.

"சாவகச்சேரிச் சந்தைக்குள் இருக்கும் நாலு கிட்டங்கி அறைகளடங்கிய நாலுபரப்பு நிலமும், அச்சந்தையிலிருந்து இரண்டு மைலுக் கப்பால் தனங்களப்பிலிருக்கும் காசிப்பிள்ளை கட்டென்று சொல்லப்படும் 100 பரப்பு வயலும், சாவகச்சேரி சங்கத்தானை இங்கிலீசுப் பள்ளிக்கூடத்துக்குக் கிட்ட ஒரு ஒழுங்கையிலிருக்கும் ஐம்பது பரப்படங்கிய தென்னைமரங்களுள்ள ஒரு காணியும் இங்கிலீசுக்கு 1923ஆ கார்த்திகைமீ முதலாந்திகதி வியாழக்கிழமை பின்னேரம் 4மணிக்கு சாவகச்சேரிச் சந்தைக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் கூறி விற்கப்படும். தேவையானால் இக்காணிகளைப் பிரித்துத் துண்டுகளாகவும் வாங்கிக்கொள்ளலாம். சொல்லப்பட்ட திகதிக்கு முந்தியும் விலை திருந்துமானால் என்னைக் கண்டு ஒழுங்குபண்ணி வாங்கிக்கொள்ளலாம்.

செ. சி குமாரசாமி,
விரிந்தாவனம்,
கொடிகாமம்.


---

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க, மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.